Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 2, Special Issue - 2, January 2023 E-ISSN: 2583-0481

# Life of the Coastal Land People

**A. Dennis,** Assistant Professor of Tamil, Bishop Heber College, Tiruchirappalli-17, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0003-4702-0597**
**DOI: 10.5281/zenodo.7584036**

## Abstract

*This study compares the lives of people living in Sangam literary coastal land (Neithal Thinai) and the lives of people in "Azhi sool Ulagu" Novel. In addition to this, this study also describes the lifestyles of the people of the coastal land and their habitats. Our Tamil people are the ones who have divided the land into five parts and arranged their lives in the environment suitable for those five lands and lived a natural life with nature. This article is a comparative study only in terms of land and industry of the coastal land people. This study compares the lives of people living in Sangha literary coastal land and the lives of people in the novel "Azhi Shuk Ulagu". In addition to this, this study also describes the lifestyles of the people of the sea and their habitats.*

**Keywords:** Life, Coastal Land, People.

## References

[1] Avai Dhuraisamipallai. *Natriani Nanuru Mulamum Uraium*. Pumbukar Pathipagam, 2022.
[2] Jodi Kurus. *Alli Sool Ulagu*, Peters Sallai, Rayapattai, Chennai 14, Muthal Pathipu, 2010.
[3] Tholkappam. *Illampuranar Urai*. Thirunalvali, Theninthiya Saiva Sithatha Noorpathipu Kalakam, Munrampathippu. 2019.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:**NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால்மதிப்பீடுசெய்யப்படுந்தமிழ்ஆய்விதழ்

மலர் - 2, சிறப்பிதழ் - 2, தை 2054 இ - ஐஎஸ்எஸ்எண்:2583-0481

# நெய்தல் நில மக்களின் வாழ்வியல்

**ஆ. டென்னிஸ்,** உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி -17, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0003-4702-0597**
**DOI: 10.5281/zenodo.7584036**

**ஆய்வு சுருக்கம்**

*சங்க இலக்கிய நெய்தல் நில மக்களின் வாழ்க்கையையும், ஆழி சூழ் உலகு என்னும் புதினத்தில் உள்ள மக்களின் வாழ்க்கையையும், ஒப்பீடு செய்வதாக இந்த ஆய்வு அமைகின்றது. அதோடு, இதில் கடல் சார் மக்களான நெய்தல் நில மக்களின் வாழ்வியல் முறைகளையும் அவர்களுடைய வசிப்பிடங்களையும் விவரிப்பதாகவும் இந்த ஆய்வு அமைகின்றது. தமிழ் மொழி மிகவும் பழமையான ஒரு மொழியாகவும் பல இலக்கியங்களைக் கொண்ட மொழியாகவும் உள்ளது சங்க காலம் தொடங்கி இன்று வரை உள்ள நமது இலக்கியங்கள் மனிதர்கள் வாழ்வியலோடு ஒட்டி இருக்கக் கூடியதாக அமைந்துள்ளது இலக்கியங்களும் இலக்கணங்களும் மனிதர்களின் வாழ்க்கையை எவ்வாறு வாழ வேண்டும் என்பதனை கூறுவதாக இருக்கின்றது. தமிழ் மொழியின் இலக்கண நூலான தொல்காப்பியம் பொருளதிகாரம் இப்படித்தான் வாழவேண்டும் என்று இலக்கணம் வகுக்கும் நூலாக உள்ளது.நெய்தல் நில மக்களின் வாழ்வியல் எனும் பொருண்மையில் அமைந்த இந்த கட்டுரையானது, சங்க இலக்கியத்தில் உள்ள நற்றிணையில் நெய்தல் நில பாடல்களையும், தற்கால இலக்கியமான, புதினத்தில் ஜோடி குருஸின் 'ஆழிசூழ் உலகு' என்ற நெய்தல் நிலபுதினத்தையும், ஒப்பீடு செய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**திறவுச்சொற்கள்:** நெய்தல், நிலம், வாழ்வியல்.

**முன்னுரை**

தமிழ்ச் சான்றோர்கள் நிலத்தை ஐந்து பிரிவாக பகுத்து கொண்டு அந்த ஐந்து நிலத்துக்கும் ஏற்ற சூழலில் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு இயற்கையான ஒரு வாழ்க்கையை இயற்கையோடு வாழ்ந்து வந்தவர்கள் நமது தமிழ் மக்கள். ஒவ்வொரு கால மாற்றத்துக்கு ஏற்றார்போல் தமது வாழ்க்கையை மாற்றிக் கொண்டு மனிதன் முன்னேற்றம் அடைந்திருப்பது இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டின் இலக்கிய வளர்ச்சியின் மூலம் தெரிந்துகொள்ள முடிகின்றது. நெய்தல் நில மக்களின் நிலம், தொழில் ஆகிய நிலைகளில் மட்டுமே இக்கட்டுரையானது ஒப்பீட்டு ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. தமிழக மக்கள் தங்களின் அகவாழ்க்கை முறைகளைத் திணை முறையில் வகுத்துக்கொண்டு வாழ்வதற்கு அத்திணையை முப்பொருளாக முறைப் படுத்துகின்றனர். இதனை, "முதல் கரு உரிப்பொருள்

என்ற மூன்றே நுவலும் காலை முறை சிறந்தனவே பாடலுட் பயின்றவை நாடும் காலை" எனும் நூற்பாவில் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

**முதற்பொருள், நிலம்**

முதற்பொருள் நிலம் காலம் என இருவகைப்படும். நெய்தல் நிலம் என்பது கடலும் கடல் சார்ந்த இடமாக உள்ளது .நெய்தல் மலர்கள் மிகுதியாக இருப்பதால் நெய்தல் எனப் பெயர் வந்தது. நெய்தல் நிலத்தில் வாழக்கூடிய மக்கள் தங்களின் வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்றாற்போல வீடுகளை அமைத்துக் கொண்டு வாழ்ந்தனர். நெய்தல் நிலமக்கள் கடலையடுத்த வெண்மணல் திடலில் சிறு சிறு குடிகளை அமைத்துக் கொண்டு வாழ்ந்தனர். என்பதனை, **“சிறுகுடிப் பரதவர் மகிழ்ச்சியும் பெருந்தண் கானலும் நினைந்த அப் பகலே” (நற்றிணை- 87), “பெண்ணை இவரும் ஆங்கண் வெண் மணற் படப்பை எம் அழுங்கல் ஊரே” (நற்றிணை- 38), “தண்குடி தாழ்நர் அம்குடிச் சீறூர்” (நற்றிணை- 135), “கண்டல் வேலிக் கழி சூழ் படப்பை முண்டகம் வேய்ந்த குறியிறைக் குரம்பை” (நற்றிணை- 135)** இவ்வாறு நெய்தல் நில மக்கள் அலைகள் நிறைந்த கடற்கரையில் வெண்மையான மணல் பரப்பை உடையதும், உயர்ந்த பனை மரங்களும், தாழை மரங்களை வேலியாக உடையதுமான கொல்லை அதனுள் முள்ளிச் செடிகள் வேய்ந்த குறுகிய கூரையால் குடிசைகள் நிறைந்த நெய்தல் நில மக்களின் வீடுகளை, சேரி, குப்பம், பாக்கம், பட்டினம் சிறு குடிசை என்ற பெயர்களாலும் வழங்கப்பட்டதை அறியமுடிகிறது. நாவலில்காணப்படும் கடற்கரையில் உள்ள மக்களின் நிலம் வசிக்கக்கூடிய வீடுகள் பற்றி கூறும் பொழுது, "கரையை ஒட்டினாற்போல் மேற்கே அமைந்திருந்த அந்தோனியார் கோவிலும், நடுத்தெருவில் பங்குக் கோவிலின் இரண்டு கோபுரங்களும், கிழக்கே மையாவடியும் மிகத் தெளிவாகத் தெரிந்தன.

அந்தோணியார் கோவிலுக்கு மேற்கே உள்ள அடர்ந்த பனங் காட்டில் ஆங்காங்கே சில குடிசைகள் தென்பட்டன. பங்கு கோவிலை ஒட்டினார் போல இருந்த பகுதியில் தான் வீடுகள் நெருக்கமாக தெரிந்தன. தென்னங்கீற்றுகளால் ஆன குடிசைகளும் ,காரை வீடுகள் இருந்தன. வீடுகளுக்கு இடையே பூவரசு, வேம்பு, தென்னை போன்ற மரங்கள் சூழப்பட்டிருந்தது .என்பதனையும் மீன்பிடிக்க சென்ற மீனவர்கள் பேசிக்கொள்ளும்போது கோவிலின் கோபுரங்கள் உயர்ந்தும் அதற்கு அடுத்தபடியாக குடிசைகள் தெரிவதாகவும் பேசிக்கொள்கின்றனர். அவர்களின் குடியிருப்பு பகுதிகளில் தென்னங்கீற்றுகளான குடிசை வீடுகளும் காரை வீடுகளும் காணப்படுகின்றன என்றும் *ஆழி சூழ் உலகு* நாவலின் காணப்படுகின்றது. கடற்கரையில் வாழக்கூடிய மக்கள் சங்க நெய்தல் பாடல்களில் வருவதைப் போல குடிசைகளில் வாழக்கூடிய மக்களாக தான் நாவல்களிலும் காட்டப்படுகின்றனர். ஆனால் இப்பொழுது கோவில்களும், காரை வீடுகளுமாக வாழ்கின்றனர். சங்க கால மக்கள் முழுவதுமாக தங்களின் வாழ்க்கையை இயற்கையான ஒரு சூழலில் தான் வாழ்ந்தனர். இதனை ஒப்பீடு செய்து பார்க்கும் பொழுது தற்கால மக்கள் முன்னேற்றம் அடைந்துள்ளனர். ஆனால் பல்வேறு தொழில்களை செய்து கொண்டு பல்வேறு

மாற்றத்தோடு இயற்கைக்கு அப்பார்பட்டு செயற்கையான முறையில் வாழ்கின்றனர் என்பதனை உணர முடிகின்றது.

**தொழில்கள்**

நெய்தல் நில மக்களின் தொழில்கள் கடலை சார்ந்து உள்ளது. சங்க காலம் முதல் இன்றுவரை மக்களின் தொழில்கள் எந்த இடத்தில் வாழ்கிறார்களோ அந்த இடத்திற்கு ஏற்றார் போல அவர்களின் தொழில் அமைகின்றது. சங்க இலக்கியத்தின் முக்கிய தொழிலாக மீன்பிடி, உப்பு விளைவிப்பது, மாட்டு வண்டிகளில் உப்பு விற்பனை செய்வது போன்றவற்றை தங்களின் முதன்மையான தொழிலாக மேற் கொண்டனர். என்பதனை, "கானல் அம் சிறுகுடிக் கடல் மேல் பரதவர் நீல்நிறப் புன்னை கொழுநிழல் அசை இத் தண் பெரும் பரப்பின் ஒண் பதம் நோக்கி" என்ற பாடல் வரிகள் மூலம் பரதவர்கள் கடலில் மீன் பிடித்து வந்து காத்திருந்து, பின் மீண்டும் கடலில் செல்வதற்கு உரிய நிறத்தை பார்த்து இருப்பார்கள் என்பதை குறிக்கின்றது. வேற்று நாடுகளில் இருந்தும் நமது நாட்டிற்கு பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டு உள்ளன. என்பதனை, **"வேறுபல் நாட்டில் கால் தர வந்த, பல வுறு பண்ணியம் இழிதரு நிலவுமணல்" (நற்றிணை-31)** பல நாடுகளிலிருந்து நமது நாட்டிற்கு பல வகையான பொருள்களைக் கொண்டு வந்த பொருட்களை வாங்கிச் செல்வதற்காக அந்த கடற்கரை மணலில் குவிந்து இருந்தனர். என்பதனை அறிந்து கொள்ள முடிகின்றது. நெய்தல் நில மக்களின் தொழில்கள் உப்பு விளைவித்தலுலேல், உப்பு விற்றலும் ஒரு முக்கிய தொழிலாக கொண்டிருந்தனர். என்பதனை, **"கொண்டுஞ் செல்வர் கொல் தோழி – உமணர், வெண் கல் உப்பின் கொள்ளை சாற்றிக், கணநிரை கிளர்க்கும் நெடு நெறிச் சகடம், மணல்மடுத் துரலும் ஓசை கழனிக்" (நற்றிணை- 4)**

உமணர்கள் வெண்மையான உப்பினை உப்பு வண்டிகளில் ஏற்றிக் கொண்டு விலை கூறி விற்று செல்வார்கள். **"உவர்விளை உப்பின் குன்று போல் குப்பை மலை, உயத்து பகரும் நிலையா வாழ்க்கை, கணம்கொள் உமணர் உயங்குவயின் ஒழித்த" (நற்றிணை- 138), "நம் நாட்டு விளைந்த வெண்ணெய் தந்து, பிற நாட்டு உப்பின் கொள்ளை சாற்றி" (நற்றிணை- 183).** கூட்டமாக வாழும் உப்பு வணிகர்கள் ஓரிடத்தில் நிலையாக வாழும் இயல்பினர் அல்லர். அவர்கள் உவர் நிலத்தில் விளையும் மலை போன்ற உப்புக்குவியலை மலை நாட்டிற்க்கு சென்று வணிகம் செய்து வந்தார்கள். உமணர்கள் தங்கள் வண்டியை அச்சு முறிந்த இடத்திலேயே விட்டு செல்வார்கள். மருத நிலத்தில் உள்ள வணிகர்கள் தமிழ்நாட்டில் விளைந்த வெண்ணெல்லை வண்டிகளில் ஏற்றிச் சென்று நெய்தல்நிலத்தில் விற்றனர். அந்நெல்லிற்க்கு விலையாக நெய்தல் நில உப்பை பெற்றுக் கொண்டுபோய் விலைகூறி வணிகம் செய்தனர். கடற்பகுதியில் வாழக்கூடிய உமணர்கள் உப்பை விளைவிப்பது அதனை வணிகம் செய்வதையே தனது முக்கிய தொழிலாக கொண்டிருந்தனர். காலம் மாறினாலும் நிலத்திற்கு ஏற்ற தொழில்கள் மாற்றமடையாமல் இருப்பதைக் காண முடிகின்றது."ஆழி சூழ் உலகு" நாவல் பரதவ இன மக்கள் காணப்படும் சூழலை வெளிப்படுத்துகின்றது. இதில் அவர்களின் முக்கிய தொழில் மீன்பிடிப்பது என்பதனையும் அறிய முடிகிறது. **"ஐந்து முறை வலை போட்டும்**

**மச்சமில்லாததால் ஆறாவது முறையாக வலை தள்ளி இப்போது வலை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் .அமாவாசை இருட்டாக இருந்தால் கடலின் மேற்பரப்பில் கவுரு கிளம்பியதன்காரணமாக ஆங்காங்கே வெளிச்சப் புள்ளிகள் தெரிந்தன" (ப.10)** இவ்வாறு அவர்கள் கடலில் வலை போட்டு பிடித்ததை காணலாம். "வீரமும் வேகமும் நிறைந்தவர்கள் தான் இந்த தொழிலுக்கு சென்று திரும்ப முடியும். போராட்டங்களுக்கு மத்தியில் நல்ல லாபகரமான தொழிலாக கருதப்பட்டாலும் கூட சுறப்பாறுதொழில் என்பது பரதவர்களுக்கு ஒரு சிம்ம சொப்பனம் தான். ஆடி மாத கடல் அடியிலும் பூண்டு தொழில் செய்பவர்கள் கூட இந்த சுறப்பாறுஎன்ற பெயரைக் கேட்டதுமே அஞ்சி நடுங்குவார்கள். காற்றையும் கடலையும் எதிர்த்துப் போரிடுவது இவர்களின் அன்றாட வாழ்வாக இருந்தாலும் இந்த சூறா மீன் வேட்டையில் கரணம் தப்பினால் மரணம் நிச்சயம். சுறாப்பாறுக்கு இவர்கள் குறிவைத்து போவது சுறாமீன் வேட்டைக்காகத் தான். வேளா, இழுப்பா, கொம்பன் சுறா வரிப்புலியன், உழுவை போன்ற சுறாமீன்களுக்காகத்தான்" (ப. 24) சுறாமீன் பிடிக்கப் போவது சுறா வேட்டை என்றும் அதனால் வரும் இன்னல்களை தெரிந்தும் சுறாமீன் வேட்டைக்கு போவது காணப்படுகிறது. இவர்கள் கடலுக்குள் மீன்பிடிக்க போவதற்கு முன்பாகவே அதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்கின்றனர் வலை கயிறு, தாக்கோல், தோணி போன்ற அனைத்தையும் அவர்களை செய்யக் கூடியவர்களாக இருந்தனர். கடலில் இருந்து கிடைக்கும் பொருட்களை மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடியவர்களாகவும், இறக்குமதி செய்பவர்களாக உள்ளனர்.

முத்துக்குளித்தல் அவர்களின் தொழில்களில் ஒன்றாக காணப்படுகிறது. கொழும்பில் சேனா பீனாவின் மறைவிற்குப் பிறகு செல்வம் கொழிக்கும் சம்பை வியாபாரத்தை அமலோற்பவத்தின் சகோதரர்கள் ஏற்று நடத்திக் கொண்டிருந்தார்கள். முன்னால் பீனாவின் ஐயா காலத்தில் ஆமந்துறை உள்பட பக்கத்து துறைகளில் எல்லாம் கிடைத்த அனைத்து மடி மீன்களும் உலர்த்தி கருவாடான பின்பு தூத்துக்குடியில் அவர்களுக்கு இருந்த கிடங்கிற்கு மாட்டு வண்டிகளில் அனுப்பப்பட்டு அங்கிருந்து பாய்மரக் கப்பல்களில் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டன". (ப. 51) மீன்களை காயப்போட்டு கருவாடாக்கி அதை கொழும்புக்கு பாய்மரக் கப்பல்கள் மூலமாக ஏற்றுமதி செய்து வருமானம் பெற்றுள்ளனர். இதுபோல் **"தோணிப்பாலத்தில் கப்பல் நடைத் தோணிகளில் இருந்து கோதுமை மூட்டைகளை இறக்கிக் கொண்டிருந்தனர்." (ப. 51) "தூரத்தில் தோனி பாலத்தின்முனையில் பாய்மரக்கப்பல் கான பகுதியில் தொம்மாந்திரை தேடிவந்த ரெஜினா நின்றிருந்தது. யாழ்ப்பாணப் புகையிலை சிப்பங்களை இறக்கிக் கொண்டிருந்தார்கள்". (52) "ஒருசில உப்பளங்களில் குவிந்துகிடக்கும் உப்பை ஏற்றுவதற்காக மாட்டு வண்டிகளும் கழுதைகளும் வரிசையாக நிற்க வைக்கப்பட்டிருந்தன". (57)** உப்பளங்களில் வேலை செய்து மிகவும் கடினமான பணியாக காணப்பட்டது. உப்பை விளைவிப்பது என்பது வெயில் அதிகமாக உள்ள காலங்களில் தான் உற்பத்தி செய்ய முடியும் அதனால் அதில் வேலை செய்வது அதிக

மலர் - 2, சிறப்பிதழ் - 2, தை 2054 இ - ஐஎஸ்எஸ்எண்:2583-0481

உடலுழைப்பை கொண்ட தொழிலாக காணப்பட்டது. சங்ககாலத்தில் நெய்தல் நில மக்களின் முக்கிய தொழிலாக காணப்பட்ட மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல், விற்றல், மீன் விற்றல் போன்ற தொழிலை முதன்மையாகக் கொண்டது போல் இன்றுவரை கடலோரத்தில் வாழக்கூடிய பரதவ மக்கள் அதே தொழிலைத்தான் செய்து கொண்டும் இருக்கின்றனர் என்பதை சங்க கால மக்கள் அவர்களின் தொழிலில் மிக அதிக அளவில் இயற்கையோடு இயற்கையாக நேசித்து தங்களின் தொழிலை செய்தனர்.

**தொகுப்புரை**

சங்ககால நற்றிணையில் குறிப்பிடக்கூடிய மக்கள் முழுவதுமாக இயற்கையோடு இணைந்து வாழ்ந்த வாழ்க்கை முறைகளையும் "ஆழி சூழ் உலகு" என்னும் புதினத்தில் நெய்தல் நிலத்தில் வாழும் மக்களின் வாழ்க்கை முறைகளையும் ஒரு சில மாற்றங்களுடன் தங்கள் வாழ்க்கையை வாழும் முறையை காட்டுகிறது. நெய்தல் நிலத்தில் உள்ள எந்த ஒரு நிலையிலும் மாற்ற முடியாது என்பதே உண்மையாக உள்ளது. சங்க இலக்கியத்தில் ஒன்று நற்றிணை. இதில் வரும் நெய்தல் திணைப் பாடல்களில் வரும் மக்களின் வாழ்வியலானது இயற்கையோடு இயைந்து வாழ்ந்து வந்த முறைகளை காட்டும் கண்ணாடியாக நம் கண்முன் அமைந்திருப்பதையும், இதயே ஜோடி குரூஸின் ஆழிசூழ் உலகு என்னும் தன்னுடைய புதினத்தின் நெய்தல் நில மக்களின் வாழ்க்கை முறைகளில் ஒரு சில மாற்றங்களுடன் தந்திருந்தாலும், மக்களின் வாழ்வியல் மாறினாலும், நெய்தல் நிலத்தின் கடல் மற்றும் இதனால் அதிலிருந்து எழும் அலைகளையும் எந்த ஒரு நிலையிலும் மாறாது என்றும் மக்களின் பழக்க மாறினாலும் கடலின் தன்மைகள் எந்த நிலையிலும் மாறாது மாற்ற முடியாது என்பதே நிதர்சனமான உண்மையாக திகழ்கிறது.

**குறிப்புகள்**

[1] ஔவை துரைசாமிப்பிள்ளை. *நற்றிணை நானூறு மூலமும் உரையும்*, பூம்புகார் பதிப்பகம், இரண்டாம் பதிப்பு, 2020.

[2] ஜோடிகுருஸ். *ஆழி சூழ் உலகு*. பீட்டர்ஸ் சாலை ராயப்பேட்டை, சென்னை-14, முதற்பதிப்பு, 2010.

[3] தொல்காப்பியம். இளம்பூரணர்உரை, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், மூன்றாம்பதிப்பு, 2019.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.